**செ.வெ.எண்: 18** **நாள்: 12.12.2016**

# பத்திரிகைச் செய்தி

பொது விநியோகத்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிராமத்தில் ஒவ்வொரு மாதமும் 2-ஆம் வாரத்தில் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 1மணி வரை அந்தக் கிராமத்தில் உள்ள குடும்ப அட்டைகள், நியாயவிலைக் கடை தொடர்பான குறைகள் தீர்க்கும் பொருட்டு தொடர்புடைய வட்ட வழங்கல் அலுவலர்கள் முன்னிலையில் பொது விநியோகத்திட்ட குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. டிசம்பர் 2016 -ஆம் மாதத்திற்கான **குறைதீர்க்கும் கூட்டம் 3-வது சனிக்கிழமை (17.12.2016)** அன்று நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் தொடர்புடைய கூட்டுறவுச் சங்க தனி அலுவலர், ஊராட்சி மன்றத் தலைவர், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நுகர்வோர் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். இந்தக் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரால், துணை ஆட்சியர் நிலையில் நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் பார்வையாளராக இருப்பார்.

புதுக்கோட்டை வட்டம் வாராப்பூர் கிராமம், ஆலங்குடி வட்டம் கீரமங்கலம் திருமயம் வட்டம் விராச்சிலை கிராமம், குளத்தூர் வட்டம் வத்தனாக்குறிச்சி கிராமம், இலுப்பூர் வட்டம் வயலோகம் கிராமம், கந்தர்வகோட்டை வட்டம் சுந்தம்படிட்டி கிராமம், அறந்தாங்கி வட்டம் மரமடக்கி கிராமம், ஆவுடையார்கோவில் வட்டம் கோபாலபட்டிணம் கிராமம், மணமேல்குடி வட்டம் அம்மாபட்டிணம் கிராமம், பொன்னமராவதி வட்டம் காரையூர் கிராமம், கறம்பக்குடி வட்டம் ரெகுநாதபுரம் கிராமம், விராலிமலை வட்டம் கொடும்பாளூர் கிராமம்.

மேற்படி கூட்டத்தில் பொதுமக்கள், குறிப்பாக குடும்ப அட்டைதாரர்கள் கலந்து கொண்டு நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் மற்றும் குடும்ப அட்டைகளில் தங்களுக்குள்ள இடர்பாடுகள் குறித்து எடுத்துக்கூறி பயன் பெறலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**